IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

REA.1/2021 IN REP.191/2020

Deposition of PW-1 witness for the petitioner solemnly affirmed under the provisions of Oaths Act No.44 of 1969, this 9.11.2021.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலாராணி | Caste | : | |
| D/o. | : | லட்சுமி (எ) கண்ணம்மா | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Chief Examination:-

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியமாக முதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். எனது தரப்பு வழக்கை நிரூபிக்க நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

1. 21.9.1983 - லட்சுமி(எ)கண்ணம்மாவுக்கு பொன்னி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் - பதிவு நகல் மதசாஆ.1
2. 30.10.2008 - கலாராணிக்கு லட்சுமி(எ) கண்ணம்மாள் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் - பதிவு நகல் மதசாஆ 2
3. பொன்னி பெயரிலுள்ள நுகர்வோர் மின் கட்டண அட்டை அசல் மதசாஆ.3

4. 21.9.1983 – 2019–2021 – மனுதாரரின் மின் கட்டண ரசீதுகள்(5) – அசல் மதசாஆ.4. மனுப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

REP.191/2020 மனு தாக்கல் செய்த பின்னிட்டுதான் நான் இந்த இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை தாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு சான்றாவணம்–1 ஆன மதசாஆ.1–ஆனது ஏற்கனவே அசல் வழக்கு எண்.123/2015 ல் வாசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள மதசாஆ.2 ஆனது ஏற்கனவே அசல் வழக்கு எண்.123/2015 ல் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே அசல் வழக்கில் ஏற்பட்ட உத்தரவில் 2 மாதத்திற்குள் தாவா சொத்தை காலி செய்து கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் உத்தரவின்படி இன்னும் நான் காலி செய்யாமல் உள்ளேன் என்று சொன்னால் அந்த சொத்தானது என்னுடைய சொத்தாகும். மேற்படி அசல் வழக்கில் தாவா சொத்து விவரத்தில் 4 வது செட்யூலில் 1 மற்றும் 2 வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் ராஜு என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த

சொத்தானது எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். நான் இவ்வாறு சொல்வது தவறு என்றாலும் மேற்படி தீர்ப்புரையின் பேரில் மேல்முறையீடு செய்யாமல் வேண்டுமென்றே இந்த நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை தாமதப்படுத்த வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/- S.Kumaraguru,

Principal District Judge, Salem.